**வத்தளை மாபோல நகர சபை - 2023**

**-------------------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

வத்தளை மாபோல நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 181 (1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, வத்தளை மாபோல நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சல் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் பாதகமானதாகும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை காசுப் பாய்ச்சல் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி இந்த அறிக்கையில் 1.6 பந்தியில் 1.6.3 அவதானிப்பு தவிர, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் அத்தியாய இலக்கம் 3.28 இணக்க மற்றும் அதன் பின் இணைப்பு 2 இல் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல்களில் EG 6.2 இற்கு இணங்க செயற்பாட்டுத் தொழிற்பாடுகளின் மூலமான காசுப் பாய்ச்சல்கள் கணிக்கும் போது அகல்விரிவான வருமானக் கூற்றிற்கு சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதியல்லாத கொடுக்கல் வாங்கல்கள் மீண்டும் சீராக்கல் செய்யும் போது கூட்டுத்தொகை ரூபா 4,212,860 இற்கான சீராக்கல்கள் எவை என காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும் வட்டி வருமானம் என ரூபா 2,589,096 தொகையும் பெறுமானத்தேய்வு என ரூபா 14,722,770 தொகையும் மிகைகள்/ பற்றாக்குறைகளில் இனங்காணப்பட்ட மூலதனச் செலவு மானியம் என ரூபா 841,355 தொகையும் செயற்பாட்டுத் தொழிற்பாடுகள் என சீராக்கல் செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 446,975 இற்கான சொத்துக்கள் விற்பனை மூலம் நட்டம் மற்றும் ரூபா 2,589,096 இற்கான நிதிக் கிரயம் சீராக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 காசுப் பாய்ச்சல் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | நியமத்தின் அத்தியாயம் இலக்கம் 3.29 இணங்க மற்றும் அதன் பின் இணைப்பு 2 இல் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல்களில் EG 6.3 இற்கு இணங்க முதலீட்டு தொழிற்பாடுகளின் மூலமான காசுப் பாய்ச்சலை கணிக்கும் போது ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் 06 தொகுதிகள் கொள்வனவு செய்தல் ரூபா 18,458,220 தொகை எனினும் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்தல் என ரூபா 39,972,031 தொகை சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. மேலும் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் உபகரணங்களை அகற்றும் போது விற்பனவு என ரூபா 34,211,435 தொகையும் வட்டி வருமானமென ரூபா 2,589,096 தொகை மாத்திரம் காட்டப்பட்டிருந்தது. | | |
| (இ) | நியமத்தின் அத்தியாய இலக்கம் 3.30 இணங்க மற்றும் அதன் பின் இணைப்பு 2 இல் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல்களில் EG 6.4 இற்கு இணங்க நிதிச் செயற்பாடுகளின் மூலமான காசுப்பாய்ச்சல் கணிக்கும் போது பணமாக கிடைத்திருந்த மூலதன மானியம் என பண்டங்களாக கிடைக்கப் பெற்றிருந்த நன்கொடைகளும் உட்பட ரூபா 8,022,994 தொகை காட்டப்பட்டிருந்ததுடன், நிதிக் கிரயம் என பணமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,157,580 தொகை காட்டப்பட்டிருக்கவில்லை. | 2024 காசுப் பாய்ச்சல் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் தயாரிக்க வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் களஞ்சிய வினியோகித்தல் ரூபா 627,731 தொகை செலவு ஒன்றென களஞ்சிய இருப்புக் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு பதிலாக களஞ்சிய செலவு என்ற பெயரில் போலியான கடன்கொடுத்தோர் ஏற்படுத்தி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டு கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வேன். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கிராமிய பாதைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 2021 இன் கீழ் நிறைவேற்றப்பட்டிருந்த 3 செயற்திட்டங்கள் தொடர்பாக அழுத்த வலு தொடர்பான தரப் பரிசோதனை அறிக்கை தோல்வியடைந்த காரணத்தினால் அமைச்சினால் கொடுப்பனவு செய்ய முடியாது என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மூலதன மானியம் மற்றும் பெற வேண்டிய மூலதன மானியம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,000,000 தொகை பதிவழிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மூலதன மானியம் மற்றும் பெற வேண்டிய மூலதன மானியம் அந்த தொகையினால் மிகையாகக் | மீண்டும் அழுத்த சக்தியை கணிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருப்பதனால் பதிவழிக்காமல் தடுத்து வைக்கப்பட்டது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டிருந்ததுடன் கடன்கொடுத்தோர் மற்றும் நடைமுறை வேலைக் கணக்கு இந்தப் பெறுமதியினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2021 ஆண்டின் போது கிராமிய பாதைகள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட 2 செயற்திட்டங்கள் தொடர்பாக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 2,566,045 தொகைக்கான கடன்கொடுத்தோர் மிகை ஒதுக்கம் மற்றும் பெற வேண்டிய மூலதன மானியம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2024 கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வேன். | -மேற்படி- |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த 6 அபிவிருத்திச் செயற்திட்டங்களின் கிரயத்தின் கூட்டுத்தொகை ரூபா 4,750,837 தொகை ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் மூலதனப்படுத்துவதற்கு பதிலாக அகல்விரிவான வருமானக் கூற்றில் செலவொன்றென சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. | 2024 கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வேன். | செயற்திட்டம் மூலதனமா அல்லது மீண்டுவருமா என தெளிவாக இனங்காணக் கூடியவாறு கோப்புக்கள் பேணிச் செல்ல வேண்டியதுடன் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் கடையறை வாடகைக் கணக்கு மீதி மற்றும் அட்டவணைகளின் கூட்டுத்தொகை இடையே ரூபா 1,372,525 தொகைக்கான இணங்கியிருக்காத வித்தியாசமொன்று காணப்பட்டது. | கணினி மென்பொருளில் ஏற்பட்ட கணிப்பீட்டு வழுவொன்றாக உள்ளதுடன் மென்பொருளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.4 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் இணங்கியிருக்காத மீதி (தொங்கல் | தகவல்கள் கண்டறிய முடியாமையால் பதிவழிப்பதற்காக விடயத்திற்கு பொறுப்பான | குறிப்பிட்ட அட்டவணைகள் மற்றும் காலப்பகுப்பாய்வு சமர்ப்பிப்பதற்கு மற்றும் |

| | | |
|---|---|---|
| கணக்கு) என காட்டப்பட்டிருந்த ரூபா 8,150,079 தொகைக்காக அட்டவணை அல்லது காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக சமர்பிக்கப்பட்டுள்ளது என. | மீதிகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின்அத்தியாயம் VII பிரிவு 38(2) | நிதிக் கட்டுப்பாட்டுக்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுகின்றது எனவும், அந்த முறைமையை தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதன்படி முறைமை வெற்றிகரமாக நடாத்திச் செல்லப்படுவதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிறைவேற்றப்பட வேண்டிய எழுத்துமூல மீளாய்வொன்றின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கட்டுப்பாட்டின் மீளாய்வொன்றின் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2018 ஜனவரி 24 திகதிய 02/2018 இலக்கங் கொண்ட பொதுநிருவாக சுற்றறிக்கையின் பந்தி 05 | அரச சேவையின் ஐக்கியத்தை பேணுவதற்காக எதிர்கால செயற்பாடுகள் மற்றும் முன்னேற்ற மீளாய்வு அலுவல்கள் இலகுவாகக் கூடியவாறு அந்தச் சுற்றறிக்கையின் இணைப்பு 02 இன் படிவம் 1 முதல் 6 வரையான அனைத்து விடயங்களும் அடங்கக் கூடியவாறு மனிதவள அபிவிருத்தித் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த திருத்திய நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 82,282,721 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 74,202,464 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 57,393 | 60,027 | 71,580 | 54,376 | 57,544 | 57,407 | 48,402 | 62,063 |
| (ii) | வாடகை | 21,123 | 27,410 | 26,576 | 17,684 | 16,733 | 21,182 | 22,068 | 16,784 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 954 | 1,106 | 1,099 | 1,769 | 1,797 | 1,129 | 1,958 | - |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 190,723 | - | 223,429 | - | 103,231 | - | 89,702 | - |
| | | 270,193 | 88,543 | 322,684 | 73,829 | 179,305 | 79,718 | 162,130 | 78,847 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு ரூபா 58,707,846 இற்கான நிலுவை வீதவரி மீதியில் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட்டிருந்த தொகை ரூபா 25,352,042 தொகையாகக் காணப்பட்டமையால் அறவீடுகளின் 43 சதவீதமாகக் காணப்பட்டது. | ஏற்றுக் கொள்ளப்பட்டது என. | நிலுவை வீதவரி அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ரூபா 50,000 பெறுமதியை விட மிகையாகவுள்ள 163 வீதவரி அலகுகள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 30,433,738 தொகைக்கான நிலுவை மீதியை அறவீடு செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் எழுத்தாணைகள் வழங்கப்பட்டுள்ள ஆதனங்களின் எண்ணிக்கை 167 எனக் குறிப்பிடப்பட்டிருந்தமையால் ஆதனங்களின் எண்ணிக்கையில் இணக்கமின்மையொன்று அவதானிக்கப்பட்டது. | எழுத்தாணைகளுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் 2024.03.31 திகதியில் உள்ளவாறு ரூபா 50,000 இற்கு மிகையான 137 ஆதனங்கள் மாத்திரம் காணப்படுகின்றது என. | நிலுவை மீதிகளை அறவீடு செய்தல் தொடர்பான எடுக்கப்படும் நடவடிக்கை தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | 10 வருடங்களுக்கு மிகையான காலத்தின் பின்னரும் வீதவரி பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் 4999 அலகுகளில் 83 அலகுகள் தொடர்பாக வீதவரி ரேட் 0 தொகையும் 4 அலகுகள் தொடர்பாக பெறுமதி மதிப்பீட்டு ரேட் ரூபா 10 முதல் ரூபா 29 வரையும் ரூபா 30 வீதம் அறவீடு செய்யப்படும் 109 அலகுகளும் ரூபா 31 இற்கும் ரூபா 50 வரை அறவிடப்படும் 167 அலகுகள் காணப்பட்டமையால் சபையின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு முடியாமல் உள்ளது. | புதிய வீதவரி பெறுமதி மதிப்பீடொன்று வேண்டப்பட்டு விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என. | வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் சேகரிக்கப்பட்ட அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் 56 சதவீதத்தினால் அதாவது ரூபா 859,000 தொகையினால் மதிப்பீட்டு வருமானம் 46 சதவீதத்தினால் அதாவது ரூபா 843,000 தொகையினால் குறைந்திருந்தது. | ஏற்றுக் கொள்ளப்பட்டது என. | நிலுவை வீதவரி மீதிகள் பதிவழிக்கப்பட்டதனால் குறிப்பிட்ட ஆதனங்களின் பதிவேடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | தொலைத்தொடர்பு செலுத்துகை தூண்கள் 07 நிறுவனங்கள் தொடர்பாக 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை கட்டணம் ரூபா 233,771 தொகை அறவீடு செய்திருக்கவில்லை. | இந்த தொகைக்குரிய 4 நிறுவனங்களிடமிருந்து 2023 ஆண்டிற்குரிய ரூபா 91,866.24 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது என. | தொலைத்தொடர்பு செலுத்துகை தூண்களுக்குரிய நிறுவனங்கள் தொடர்பான நிலுவைக் கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகை மற்றும் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைத் திட்டத்தில் மற்றும் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த நிர்மாண வேலை முன்னேற்ற அறிக்கையில் காட்டப்பட்டிருந்த செயற்திட்டங்களை இணக்கஞ் செய்த போது பெறுகை திட்டத்தில் காட்டப்பட்டிருக்காத 17 செயற்திட்டங்களில் 16 செயற்திட்டங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 18,580,558 தொகை மற்றும் மதிப்பீட்டுப் பெறுமதி காட்டப்பட்டிருக்காத ஒரு செயற்திட்டத்தின் உடன்பட்டிருந்த பெறுமதி ரூபா 45,000 காணப்பட்டமையால் அண்ணளவாக கூட்டுத்தொகை ரூபா 18,625,558 தொகை பெறுகை திட்டத்திற்கு முரணான செயற்திட்டங்கள் ஆக காணப்பட்டது. | எதிர்காலத்தில் திருத்திய பெறுகைத் திட்டமொன்று சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெறுகைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பெறுகைத் திட்டத்தின் காணப்படுத்தப்பட்ட பாதைகளின் திருத்த வேலைக்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 1,000,000 எனினும் மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 16,127,067 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அதன்படி ரூபா 15,127,067 தொகை அதாவது 1513 சதவீதம் மதிப்பீட்டுத் தொகையை விட கூடுதலாக செலவிடப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் திருத்திய பெறுகைத் திட்டமொன்று சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெறுகைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட்டு அதன் படி செயற்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ திறமையின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 03 திகதி LGD/13/2016(i) இலக்கங் கொண்ட உள்ளூராட்சி திணைக்கள சுற்றறிக்கைக்கு இணங்க உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பாக வாடகை உடன்படிக்கை மேற்கொள்ளப்படும் | ஹென்தல கால்வாயின் அருகில் இருக்கக் கூடிய 14 கடைகளுக்காக 2021.11.23 மற்றும் 2023.08.29 திகதிகளைக் கொண்ட புதிய பெறுமதி மதிப்பீடுகள் | ஒவ்வொரு 3 வருடங்களுக்கும் ஒரு முறை மாதாந்த வாடகை அரச பெறுமதி மதிப்பீட்டாளரின் பெறுமதி மதிப்பீட்டிற்கு இணங்க |

| | | |
|---|---|---|
| அனைத்து கட்டிடங்களுக்கும், காணிகளுக்கும் குறிப்பிட்ட உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட தினத்திலிருந்து ஒவ்வொரு 3 வருடத்திற்கும் ஒருமுறை அரசாங்க பெறுமதி மதிப்பீட்டாளரின் பெறுமதி மதிப்பீட்டின் மீது திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும் ஹென்தல கால்வாயின் பக்கத்திலுள்ள 14 கடையறைகளுக்காக 2019 ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி மீது மீளாய்வாண்டின் மாதாந்த வாடகை அறவிடப்பட்டு வருகின்றது என அவதானிக்கப்பட்டது. | கிடைத்துள்ளதுடன் அதன்படி அந்தப் பெறுமதி மதிப்பீடு தற்போது செயற்படுத்தப்பட்டுள்ளது என. | திருத்தப்பட வேண்டும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் பதவியணியில் சிரேஷ்ட மட்டத்தின் 2 பதவிகளின் 2 வெற்றிடங்களும் இரண்டாம் மட்டத்தில் 5 பதவிகளில் 10 வெற்றிடங்களும் ஆரம்ப மட்ட 08 பதவிகளிள் 20 வெற்றிடங்களும் காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. | பிரதான செயலாளர் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டது. மேலும் முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை 02/2020 இல் 02 ஆம் பந்தியில் பிரிவு viii மற்றும் ix பிரிவிற்கு இணங்க PL சம்பள குறியீடுகளை கொண்ட பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி வெற்றிடங்களை நிரப்பிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |